# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்,

**முன்னிலை:- திரு. P. ஜேசுபாலன், M.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான்

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**வழக்கிடை மனு எண். 04/2024**

**இல்**

**அசல் வழக்கு எண். 03/2024**

**CNR.No. TNTV04-000053-2024**

*****

சகுந்தலா .... மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. செல்வம்,
2. செல்வி
3. மாரிமுத்து
4. வெங்கடேசன் ..... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்.

மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 23.04.2025-ஆம் தேதியன்று வரப்பெற்று மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மகேஸ்வரன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வு ஆகாத நிலையில், அழைக்கப்பட்டு வருகையில்லாததால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டுள்ளார்கள், மனுதாரர்/ வாதி தரப்பு வாதுரை கேட்டறிந்தும், ஆவணங்களை பார்வையிட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையிலிருந்து, இன்று (29.04.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும் ....

**// உத்தரவு //**

மனுதாரர்/வாதி, தாவாவில் நிரந்தர மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரியிருப்பதால், தாவா சொத்தினையும், அது தொடர்பான மற்ற சொத்துக்களையும் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒரு நீதிமன்ற ஆணையரை நியமித்து அவசியமானால் நில அளவையர் உதவியை பெற்றுக்கொள்ள அவருக்கு உரிய

வழிமுறைகளை வழங்கி உத்தரவிட்டும், வழக்கின் அவசர நிலையை கருத்திற்கொண்டு ஒரு Exparte Order of Appointment of Commissioner நியமனம் செய்து தகுந்த உத்தரவு வழங்கிட வேண்டி வகுமுறை 26 விதி 9 மற்றும் 10 உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/வாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2, <u>மனுதாரர்/வாதி மனுவின் சுருக்கம்</u> :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், நிரந்தர மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், தாவா சொத்தும், இன்னும் பிற சொத்துக்களும் ஏற்கனவே தோப்பு புறம்போக்கு வகைப்பாட்டிலிருந்து வந்ததை தமிழக அரசு நத்தம் என வகை மாற்றம் செய்து 01.08.2007 அன்று மனுதாரருக்கும் மற்றும் 14 பேருக்கும் இலவச வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டது என்றும், அதன்மூலம் மனுதாரருக்கு கிடைத்த தாவா சொத்து மனுதாரர் அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்து திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், 11 கீழவிடையல் கிராமம் புல எண் 29/32ல் (பழைய புல எண் 29/21) அடங்கிய விஸ்தீரணம் 0.01.17 ஏர்ஸ் குடியிருப்பு மனை பூராவும். நான்கெல்லைகள் மேற்கில் – மகாதேவ அய்யருக்கு வாதிக்கு வழங்கிய மனை பகுதி, கிழக்கில் – பிரதிவாதிகள் ஆக்கிரமித்து கட்டியுள்ள நத்தம் புறம்போக்கு பகுதி, தெற்கில் – துரை என்பவருக்கு சொந்தமான நஞ்சை, வடக்கில் – செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான நஞ்சை இதற்குட்பட்டது என்றும், இத்துடன் இணைத்துள்ள வரைபடத்தின்படி உள்ள அமைப்பு என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது.

**2, 1** மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தில், மனுதாரர் அவரது குடும்பத்தினருடன் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எந்தவித உரிமையோ பாத்தியமோ அனுபவமோ கிடையாது என்றும், தாவா சொத்திற்கு மேல் புறமுள்ள

அரசு புறம்போக்கு நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் அரசியல் செல்வாக்குள்ள காரணத்தினால் எந்த அரசு அதிகாரியும் அவரது ஆக்கிரமிப்பை பொறுத்து எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும், அந்த துனிச்சலின் காரணமாக பிரதிவாதிகளும் மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தின் மேற்புற பகுதியில் சுமார் 6 அடி அகலத்திற்கு ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட 01.12.2023 அன்று எற்பாடு செய்தார்கள் என்றும், மனுதாரர்கள் அவரது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் உதவியுடன் பிரதிவாதிகளை தடுத்து விட்டனர் என்றும், அதன் காரணமாக பிரதிவாதிகள் கோபமுற்று அவசர அவசரமாக ஆக்கிரமித்த பகுதிகளை கம்பி வேலி அமைத்து மனுதாரர் அந்த பகுதிக்கு செல்ல முடியாமல் தடுத்துவிட்டனர் என்றும், பின்னர் மனுதாரர், பிரதிவாதிகளின் தவறான செயல்பாடுகள் பற்றி ஊர் பஞ்சாயத்தில் முறையிட்டதற்கு, பஞ்சாயத்தார்கள் மனுதாரரையும் பிரதிவாதியையும் அழைத்து விசாரித்த போது பிரதிவாதிகள் பஞ்சாயத்தில் கட்டுப்பட மறுத்துவிட்டதால், பஞ்சாயத்தார் மனுதாரரை சட்டமுறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள அறிவுறுத்தியதின் பேரில், மனுதாரர் வலங்கைமான் காவல் நிலையத்தில் கடந்த 06.12.2023 அன்று புகார் கொடுத்தார் என்றும், வலங்கைமான் காவல் நிலையத்தார் சொத்து சம்பந்மான பிரச்சனையாக இருப்பதால் உரிமையியல் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேட அறிவுறுத்தியதின் பேரில், மனுதாரரின் இயலாமையின் காரணமாக உடனடியாக உரிமையியல் நீதிமன்றத்தை நாடமுடியாமல் போய் விட்டது என்றும், மீண்டும் பஞ்சாயத்தார்களிடம் மனுதாரர் முறையிட்டார் என்றும், பஞ்சாயத்தார்கள் பேசுவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது என்றும், இந்த இடைவெளியை பயன்படுத்தி கடந்த 20.10.2023 அன்று பிரதிவாதிகள் மனுதாரர் தாவா சொத்தில் ஏற்கனவே ஆக்கிரமித்து கம்பிவேலி அமைக்க பகுதியில் துரிதமாக 4 அடி அளவிற்சுகு பில்லர்கள் அமைத்து சுவர் கட்டி வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகளின்

செயலினை மனுதாரர் தன்னுடைய முதுமையினாலும் மனுதாரரின் இயலமையின் காரணமாக தடுத்து நிறுத்த இயலாத நிலையில் உள்ளார் என்றும், அதனை சாதகமாக பயன்படுத்தி கொண்டு பிரதிவாதிகள் தொடர்ந்து சுவர் எழுப்பி வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் மிக துரிதமாக கட்டிட வேலைகளை செய்து வருகிறார்கள் என்றும், தற்போதுள்ள அமைப்புகளை நீதிமன்றத்திற்கு எவ்வித குறையுமின்றி தெறிவிப்பதற்கு ஏதுவாக நீதிமன்ற ஒரு ஆணையரை நியமித்தும், அவரை தாவா சொத்துக்களை ஆய்வு செய்து அமைப்புகள் பற்றியும் விபரமான அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமும் நியாயமும் உள்ளது என்றும், இல்லையேல் எதிர்மனுதாரர்கள் அவசர அவசரமாக கட்டிட வேலையை முடித்துவிடுவார்கள் என்றும், அவ்வாறு பிரதிவாதி கட்டிவிட்டால் அமைப்புகள் முற்றிலும் மாறிவிடும் என்றும், அது வழக்கிற்கு குந்தகத்தை ஏற்படுத்திவிடும் என்றும், ஆகவே, தாவா சொத்தினையும், அது தொடர்பான மற்ற சொத்துக்களையும் உடனடியாக ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய ஒரு நீதிமன்ற ஆணையரை நியமித்து அவசியமானால் நில அளவையர் உதவியை பெற்றுக்கொள்ள அவருக்கு உரிய வழிமுறைகளை வழங்கி உத்தரவிட்டும், வழக்கின் அவசர நிலையை கருத்திற்கொண்டு ஒரு Exparte Order of Appointment of Commissioner நியமனம் செய்து தகுந்த உத்தரவு வழங்கிட வேண்டி வகுமுறை 26 விதி 9 மற்றும் 10 உரிமையியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 151–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர்களுக்கு 26.02.2024 ம் தேதியன்று சம்மன் சார்வு செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள் அழைக்கப்பட்டு வருகையில்லாததால் தோன்றாத்தரப்பினராக்கப் பட்டுள்ளார்கள்.**

4. மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் இந்நீதிமன்றம்

தீர்மானிப்பது என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.

**4.1** எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளைப் பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், வழக்குச் சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.2** மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் அவரது வாதத்தின்போது, மனுதாரருக்கு உரிமையுள்ள தாவா சொத்திற்கு மேல் புறமுள்ள அரசு புறம்போக்கு நிலத்தை பிரதிவாதிகள் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் அரசியல் செல்வாக்குள்ள காரணத்தினால் எந்த அரசு அதிகாரியும் அவரது ஆக்கிரமிப்பை பொறுத்து எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை என்றும், அந்த துனிச்சலின் காரணமாக பிரதிவாதிகளும் மனுதாரருக்கு சொந்தமான தாவா சொத்தின் மேற்புற பகுதியில் சுமார் 6 அடி அகலத்திற்கு ஆக்கிரமித்து கட்டிடம் கட்ட 01.12.2023 அன்று எற்பாடு செய்தார்கள் என்றும், மனுதாரர் தன்னுடைய முதுமையினாலும் மனுதாரரின் இயலமையின் காரணமாக தடுத்து நிறுத்த இயலாத நிலையில் உள்ளார் என்றும், அதனை சாதகமாக பயன்படுத்தி கொண்டு பிரதிவாதிகள் தொடர்ந்து சுவர் எழுப்பி வருகிறார்கள் என்றும், பிரதிவாதிகள் மிக துரிதமாக கட்டிட வேலைகளை செய்து வருகிறார்கள் என்றும், தற்போதுள்ள அமைப்புகளை நீதிமன்றத்திற்கு எவ்வித குறையுமின்றி தெறிவிப்பதற்கு ஏதுவாக நீதிமன்ற ஒரு ஆணையரை நியமித்தும், அவரை தாவா சொத்துக்களை ஆய்வு செய்து அமைப்புகள் பற்றியும் விபரமான அறிக்கையும் வரைபடமும் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமும் நியாயமும் உள்ளது என்று வாதிட்டார். வழக்கு சொத்தில் ஆக்கிரமிப்பு இருப்பதாக வாதி கோரியுள்ளதாலும் வழக்கு சொத்தில் அத்து பிரச்சனை உள்ளதால் தாவா சொத்தை

வழக்கறிஞர் ஆணைர் மூலம் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இம்மனு செலவு தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

**5.** முடிவில், மனு அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் **திரு. K. தண்டாயுதபாணி, B.A., B.L.,** அவர்கள் நியமிக்கப்படுகிறார். நீதிமன்ற ஆணையருக்கு ஊதியமாக **ரூ. 5,000/-** நிர்ணயிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் வாரண்ட் பெற்று சர்வேயர் உதவியுடன் தாவா இடத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம், வரைபடத்துடன் கூடிய சர்வேயர் அறிக்கை **06.06.2025** – ஆம் தேதியோ அதற்கு முன்போ தாக்கல் செய்யவும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை தாக்கல் செய்த பின்னர் ஊதியத் தொகையை நீதிமன்ற ஆணையர் பெற்றுக்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க: 06.06.2025**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ஆம் நாளில் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.04.29 16:03:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

| | |
|---|---|
| 1. மனுதாரர் தரப்பு சாட்சி :– | – இல்லை |
| 2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் – | – இல்லை |
| 3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :– | – இல்லை |
| 4. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் – | – இல்லை |

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.04.29 16:03:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.